மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது. தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முற்பகல் 10—50

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, பொது நிறுவனங்கள் குழுத் தலைவர். (குறுக்கீடுகள்) மற்றவையெல்லாம் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009—2011 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து ஆறு முதல் நூற்று எழுபது வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுத் தலைவர்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009—2011 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் நூற்று எட்டு மற்றும் நூற்று ஒன்பதாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.